Y.M.C.A

★ அதிக மாணவர் வரவு; குடாநாட்டு மாணவர் விடுதியில் தங்கலாம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதிய கல்வியாண்டு 'ராக்கிங்' எதுவுமின்றி நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புதிய கல்வி யாண்டுக்கான விரிவுரைகள் நேற்றையதினம் சம்பிரதாய பூர்வமான நடவடிக்கைகளுடன் ஆரம்பமாயின. மாணவர்களின் வரவு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருந்ததாகப் பீடாதிபதிகள் தெரிவித்தார்கள். பெரும்பாலாக யாழ் மாவட்டத்து மாணவர்களே காணப்பட்டனர். வெளி மாவட்டத்து மாணவர்களின் வருகை குறைவாகவே காணப்பட்டது இதே வேளை புகுமுக மாணவர்களின் வரவும் திருப்திரமாக இருந்ததாகப் பீடாதிபதிகள் தெரிவித்தனர். பல்கலைக்கழகக் கல்விசார் ஊழியர்களும் கல்வி சாரா ஊழியர்களும் பெருமளவு வருகைதந்திருந்தனர். போக்குவரத்துச் சீர்கேட்டினை முன்னிட்டு இம்முறை வழமைக்கு மாறாக யாழ் குடாநாட்டு மாணவர்களும் பல்கலைக்கழக விடுதியில் தங்க அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். இப் புதிய நடைமுறை நாட்டு நிலைமை சீராகும்வரையே —04 பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 266 செவ்வாய் 06-11-1990 (ஐப்பசி 20) ற. ஆகிர் 17

# வி. பி. சிங்கின் ஜனதாதள் கட்சி நேற்று இரண்டாகப் பிளந்தது

## பிரதமர் பதவிக்கு சந்திரசேகர் முயற்சி அடுத்த 24 மணி நேரத்தில் முக்கிய முடிவு

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கின் ஜனதா தளம் கட்சி நேற்றுப் பிளவுபட்டுவிட்டது. போட்டிக்குழுத்தலைவராகப் திரு.சந்திரசேகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்,

தாமே உண்மையான ஜனதாதளம் என் 68 எம். பிக்கள் கலந்து கொண்ட மேற்படி போட்டிக் குழு தெரிவித்தது.

திரு. சந்திர்சேகரின் பெயரைத் திரு. தேவிலால் முன்மொழிய அசோக்சென் வழிமொழிந்தார். இப்போட்டிக்குழுவின் கூட்டம் தேவிலாலின் இல்லத்தில் நடைபெற்றது.

இதே வேளை புதுடில்லியில் பாராளுமன்ற அலுவலகத்தில் பிரதமர் வி. பி. சிங் தலைமையில் நடைபெற்ற ஜனதாதள எம்: பிக்களின் கூட்டத்தில் 83 எம். பிக்கள் கலந்து கொண்டனர்.

இதனிடையே தாம் உடனடியாக ஜனாதிபதியைச் —04 ஆம் பக்கம் பார்க்க



## களுவாஞ்சிக்குடி முகாமருகே உளவாளிக்கு மரணதண்டனை

நேற்று முன்தினமிரவு களுவாஞ்சிக்குடி ராணுவ முகாம் அருகே உளவாளி ஒருவருக்கு விடுதலைப் புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் விபரங்கள், தங்கும் வீடுகளின் வரைபடங்கள் இவரிடம் இருந்து 'மீட்கப்பட்டுள்ளன.

இவரைக் கைதுசெய்த புலிகள் களுவாஞ்சிக்குடி ராணுவ முகாமில் இருந்து 200யார் —04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை நெடுங்கேணிகுளம் இரண்டாவது நாளாக மோதல்

திருமலை மாவட்டத்தில் வேப்பங்குளம்,இறக்கக்கண்டி, வில்கம் விகாரை,நிலாவேளி, ராணுவத்தினருடன் நெடுங்கேணிக்குளம் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக மோதல்கள் நடைபெற்றன.

முன்னதாக ராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ராணுவம் பலத்த இழப்புகளுடன் முகாம்களுக்குப் பின்வாங்கியது. மீண்டும் வெளியேறிய ராணுவம் மிதி —04 ஆம் பக்கம் பார்க்க

## நேற்றுப் பாடசாலைகள் இயங்கின மாணவர் வரவு அதிகரிக்கிறது

யாழ் மாவட்டத்தில் நேற்றுச் சில பாடசாலைகள் வழமைபோல நடைபெற்ற போதிலும் கடந்த வாரங்களைவிட மாணவர்கள் வரவு அதிகமாகக் காணப்பட்டது.

யாழ் நகரில் உள்ள பிரபல கல்லூரிகளில் உயர்தர மாணவர்கள் அதிகமாகக் காணப் பட்டனர்.

யாழ் இந்து - 200 க்குமேல், யாழ் இந்து மகளிர் - 200 க்கு மேல், சென். பற்றிக்ஸ்- 200 க்கு மேல், சென. ஜோன்ஸ் -200 க்கு மேல், சுண்டுக்குளி —04 ஆம் பக்கம் பார்க்க

## பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல் இரவு பராவெளிச்சம் ஏவல்

நேற்று இரவு 7. 30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து பல பரா வெளிச்சக் குண்டுகள் வானிலே ஏவப்பட்டன. இதன் —04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்கப்படுமாம்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லீம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளனவாம்.

இராணுவ அதிகாரிகள் இத்தகவலைத் தெரிவித்ததாகக் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் மன்னார் மர்வட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் இச்செய்தி தெரிவிக்கின்றது.

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கடந்த சனியன்று மாவிட்டபுரத்தில் புலிகள் நடாத்திய திடீர்த் தாக்குதலில் 12 படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் 19 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது தாக்குத —04 ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில் பொம்மர்த் தாக்குதல் இலுப்பையடிப் பிள்ளையார்கோயில் சேதம்

தெல்லிப்பழையில் நேற்று மாலை 3மணியளவில் பொம்மர்த் தாக்குதல்நடாத்தப்பட்டது.

நான்கு குண்டுகள் இங்கு வீசப்பட்டன. இரண்டு குண்டுகள் டச்சு வீதியில் விழுந்து வெடித்ததால் மூலாத்தனை இலுப்பையடிப் பிள்ளையார் கோயில் பலத்த சேதமடைந்தது.

மற்றைய இருகுண்டுகளில் ஒன்று யூனியன் கல்லூரிக்குள் விழுந்து வெடித்ததால் ஏற்கனவே சேதமடைந்த இக் கல்லூரி மேலும் சேதமடைந்தது.

இரண்டாவதுகுண்டு கல்லூரிக்கு அருகில் உள்ள வீட்டில் விழுந்து அதனைச்சேதமாக்கியது.

மாவிட்டபுரம் மினிமுகாம் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியதையடுத்தே இந்த விமானத்தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ப10)

## கொழும்புப் பாடசாலைகளில் யாழ்ப்பாணப் பிள்ளைகளுக்கு இடமின்றி அலைகிறார்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச்சென்ற பலர் தமது பிள்ளைகளை அங்குள்ள பாடசாலைகளில் சேர்க்க முடியாது அவதியுறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இங்குள்ள பாடசாலைகளின் படிகளில் பெற்றோர் தினமும் ஏறி இறங்குவதைக் காணமுடிகிறது. நன்கொடைப் பணம் (டொனேசன்) தேவையானளவு தருகிறோம், பிள்ளைக்கு இடம் தாருங்கள் என்று பல பெற்றோர் இப் பாடசாலை அதிபர்களைக் கேட்டும் பயன் கிடைக்கவில்லையாம்,

## பல்கலைக்கழகப் புதிய அனுமதி; கொழும்புமாவட்ட 'கட் அவுட்' புள்ளிகள் வெளியாகின

கொழும்பு மாவட்டத்திலிருந்து 1990 91 ஆம் கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவதற்கு மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய ஆகக் குறைந்த (கட்அவுட்) புள்ளிகள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படடுள்ளன.

இதன்படி கொழும்பு மாவட்டத்திலிருந்து வைத்திய பீடத்திற்குத் தெரிவாவதற்கு ஆகக்குறைந்தது 288 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பொறியியல்பீடத்திற்கு275 புள்ளிகளும், பௌதிகவியல் துறைக்கு 256 புள்ளிகளும், வர்த்தகத் துறைக்கு 260 புள்ளிகளும் ஆகக்குறைந்த புள்ளிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்களுக்கான கட்அவுட் புள்ளிகள் விரைவில் அறிவிக்கப்படுமெனப்பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்றுக்கொழும்பில் தெரிவித்தது.

## மாநகர சபைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள்

யாழ் நகரிலும், மாநகர சபைக்கு உட்பட்ட ஏனைய பகுதிகளிலும் குப்பை, கூழங்கள் நிரம்பியும், வாய்க்கால்கள் கழிவு நீரால் அடைபட்டு தேங்கி நிற்பதினாலும் மக்களுக்கு பலத்த அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாகத் தொற்று நோய்கள் பரவக் கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

இக்குப்பை கூழங்களை மழை காலத்திற்கு முன்பதாக அகற்றி இருக்கலாம் அல்லது அவ்விடத்திலேயே அழித்திருக்கலாம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

எனவே இனியும் காலம் தாழ்த்தாது மாநகர சபை உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் அவசர வேண்டுகோள் விடுக்கின்றனர். (16)

## யாழ் தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி வகுப்பு விபரம் அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் தொழில் நுட்பப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் இடம், திகதி பற்றிய விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மனையியல், நெசவு, வனைதல், மோட்டார் பொறித் தொழில், வானொலி பேனல் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி 8-ம் திகதி -னகரதினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

விவசாய ஆசிரியர்களுக்கு 7-ம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும், 8-ம் திகதி சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் நடைபெறும்.

விவசாயம், மனையியல், வனைதல் ஆசிரியர்களுக்கு 10-ம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும், 7-ம் திகதி விவசாயம், மனையியல், வனைதல், நெசவு ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்திலும், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் 9-ம் திகதி விவசாயம், மனையியல், நெசவு ஆசிரியர்களுக்கும், அதேதினம் நெசவு, வனைதல் ஆசிரியர்களுக்கு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும், 10-ம் திகதி இராமநாதன் கல்லூரியில் விவசாயம், மனையியல் ஆசிரியர்களுக்கும் சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

இவ்வகுப்புக்கள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என தொழில் நுட்பக் கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (16)

## யாழ் நோக்கி மாணவர்கள் சைக்கிள் சவாரி

யாழ் நகரிலுள்ள முக்கிய கல்லூரிகளிற் கல்வி கற்கும் தூர இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் தற்பொழுது கல்லூரிகளுக்குச் செல்வதற்குச் சைக்கிள் வண்டிகளைப் பயன்படுத்துகின்றனர்.

நேற்றுக் கொடிகாமத்திலிருந்தும், தென்மராட்சியின் ஏனைய கிராமங்களிலிருந்தும் கூட்டம் கூட்டமாக மாணவர்கள் சைக்கிள்களில் யாழ் நோக்கிச் சீருடையில் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறே நேற்றுப் பெருந் தொகையான பல்கலைக்கழக மாணவர்கள் தூர இடங்களிலிருந்து சைக்கிள்களில் பல்கலைக்கழகத்திற்குச் சென்றதாக எமது நிருபர்கள் அறிவிக்கிறார்கள்.

## இரண்டாம் கட்டம் விநியோகம்

பளைப் பகுதி மக்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரண உணவுப் பொருட்கள் சகல பல நோ. கூ. சங்கக் கிளைகளிலும் வழங்கப்பட்டுவருகிறது

பளைப்பகுதிக்கென கப்பலில் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருட்களே 2ஆம் கட்ட நிவாரணமாக வழங்கப் படுகிறது. (ப-3)


### சிறு விளம்பரம்

**சேவை**

தரமான போட்டோ ஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கை லைன்ஸ்'' 281B, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை) 11023

**சேவை**

தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீகாந் புத்தக சாலை, நல்லூர். மக்மிலன் புத்தசாலை, ஓட்டுமடம். 11005



### ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி

அமரர்

மாதவன் சிவகுரு

அன்னை மடியில்: 17 - 11 - 1932 ஆண்டவன் அடியில்: 18 - 10 - 1989

திதி: 6 - 11 - 1990

வட்டுக்கோட்டையைபிறப்பிடமாகக் கொண்டவரும் வட்டுக் கிழக்கு சர்வோதய சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் திரைப்பட நகைச்சுவை நாடக நடிகருமான எங்கள் குருவே!

எங்கள் நிலையத்தை நல்வழி காட்டி வைத்த தலைவா எங்கள் குருவே சிவகுருவே.

ஆண்டொன்று சென்றாலும் நன்றியுடன் உங்களை இன்று நினைவு கூர்ந்து உங்கள் ஆத்ம சாந்திக்காக நிலையச் சார்பாகப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை. — சர்வோதய ச. ச. நிலைய உறுப்பினர்கள்.

11034


காங்கேசன் முதல் - வவுனியா வரை

# புகையிரதப்பகுதி தமிழ் ஊழியர்கள் தெற்கிற்கு திடீர் இடமாற்றம்

வடபகுதியில் பணிபுரிந்த நூற்றுக்கணக்கான புகையிரதப் பகுதி ஊழியர்கள் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

காங்கேசன்துறை முதல்—வவுனியா வரையுள்ள புகையிரத நிலையங்களிலும், புகையிரத வேலைத்தளங்களிலும் கடமைபுரிந்த நூற்றுக்கணக்கான ஊழியர்களே தென்பகுதியில் உள்ள புகையிரத நிலையங்களுக்கும் வேலைத்தளங்களுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலருக்கு ஏற்கனவே இடமாற்றக் கடிதங்கள் இடைத்துள்ளன. மேலும் பல புகையிரத ஊழியர்களுக்கு இந்த இடமாற்றக் கடிதங்கள் அனுப்பப்படுவதற்கு கொழும்பில் தயாராக உள்ளதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

## ராஜீவுடன் இரு மந்திரிகள் ரகஸியச் சம்பாஷணை

தேசிய முன்னணியில் மிகப் பெரும் நெருக்கடி நிலைக்குள்ளாகியுள்ள பிரதமர் திரு. வி. பி. சிங்கின் அமைச்சரவையைச் சேர்ந்த இருவர்எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராஜீவ் காந்தியுடன் தொலைபேசி மூலம் இரகசியத் தொடர்பு கொண்டதாக நேற்றுத் தகவல் ஒன்று வெளியானது.

ஆயினும் இவர்களின் பெயர், பேச்சு விவரம் எதையும் செய்தியாளரிடம் வெளியிட முன்னாள் இ. காங்கிரஸ் அமைச்சர் திரு வி. எம். காட்கில் மறுத்துவிட்டார்.

இது இவ்வாறு இருக்க தனது அமைச்சரவையிலேயே சிலர் தனக்கெதிராகச் சதி செய்கிறார்கள் என்று திரு. சிங் சில தினங்களுக்கு முன் கூறியிருந்தது குறிப்பிடத் தக்கது.

இவரது அமைச்சரவையிலிருந்து நால்வர் இதுவரை ராஜிநாமாச் செய்துள்ளனர்,

## சங்கீதசபை பெறுபேறுகள்

வடஇலங்கை சங்கீத சபையினரால் 1990 ல் நடத்தப்பட்ட 5ஆம், 6ஆம தரங்கள் தவிர்ந்த ஏனைய பெறுபேறுகள் தபால்மூலம் அனுப்பி வைக்கத் தயார் நிலையில் யாழ் கல்விப் பணிப்பாளர் திணைக்களத்தில் உள்ளது.

தற்போதைய நிலைமைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள பரீட்சார்த்திகள் உரிய சான்றுகளைக் காட்டிச் சமர்ப்பித்து இப்பெறுபேறுகளை இம்மாதம் 10-ம திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (66)

## இரட்டைச் சூட்டடுப்பு விலை குறைப்பு

தற்போதைய மாரி காலச் சூழ்நிலையில் விறகுத்தட்டுப்பாடு நிலவுகிறது. கிடைக்கக் கூடிய விறகின் விலைகூட மிகஅதிகமாக உள்ளதினால் வீட்டுப் பாவனையாளர்களின் எரிபொருள் பிரச்சினையை தீர்க்கும் முகமாக தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிமுகம் செய்துள்ள இரட்டைச் சூட்டடுப்பின் விலை தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டால் கஷ்டப்படும் பாவனையாளர்கள் உங்கள் பகுதிக் கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு விலை குறைக்கப்பட்ட 'இரட்டைச் சூட்டடுப்பினை' வாங்கிப் பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (71)


### St. PATRICK'S COLLEGE, JAFFNA

**பெற்றோரின் கவனத்திற்கு**

1-ம் ஆண்டு தொடக்கம் 13-ம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள், பல இடையூறுகள் மத்தியிலும், மிகவும் ஒழுங்காக நடைபெறுகின்றன. இவ் வகுப்புகளிலும், மதிப்பீட்டுப் பரீட்சைகளிலும் பங்குபற்றாதவர்கள் கல்வியாண்டு இறுதியில் வகுப்பேற்றத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

RECTOR

11035


## சுயவிருப்பின் பேரில் இளைப்பாறுவதற்கான விருப்பம் தெரிவிக்கும் படிவம்

பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபம்
இல. 44/90 இல் கண்டுள்ள இணைப்பு "A"

பின்வரும் முரசொலி முகவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்:-

நல்லூர்:
பூபாலசிங்கம் புத்தகசாலை.
மக்மிலன் புத்தகசாலை.
மண்டேலா புத்தகசாலை.
ஸ்ரீகாந் புத்தகசாலை.

கல்வியங்காடு:
குலசி ரேட்ஸ்.

திருநெல்வேலி:
கனகா ரேட்ஸ்

கொக்குவில்:
லக்சுமி ரேட்ஸ்

இணுவில்:
ச. கிருஸ்ணராசா

சுன்னாகம்:
துர்க்கா புத்தகநிலையம்

மல்லாகம்:
நாதன் புத்தகசாலை

தெல்லிப்பழை:
ஆர். பொன்னையா

அளவெட்டி:
எஸ். கதிர்காமசிங்கம்

மானிப்பாய்:
நாயகபாலன்

சங்கானை:
ஆர். புஷ்பநாதன்

சித்தன்கேணி:
எஸ். தியாகராசா

சுழிபுரம்:
எம், றமணன்

பண்டத்தரிப்பு:
எஸ். சுவாமிநாதன்

வட்டுக்கோட்டை:
மகாலக்சுமி ஸ்ரோர்ஸ்

காரைநகர்:
எஸ். கந்தசாமி

கைதடி:
ஆ. கந்தையா

சாவகச்சேரி:
பரம்ஸ்

கொடிகாமம்:
அருளநாயகி

பளை:
மோகன் கூல்பார்

இருபாலை:
ஆர். இராசதுரை

புத்தூர்:
விநாயகர் ஸ்ரோர்ஸ்.

அச்சுவேலி:
லக்சுமி கிறீம் ஹவுஸ்.

நெல்லியடி:
மொடேர்ன் ஸ்ரோஸ்.

மந்திகை:
கே. வி. கணேசராசா.

பருத்தித்துறை:
உதயன் புத்தகசாலை.

வல்வெட்டித்துறை:
கலைசோலை புத்தக நிலையம்.

உடுப்பிட்டி:
எம். பீ. தர்மலிங்கம்.

புங்குடுதீவு:
எஸ். பரநிருபசிங்கம்.

வேலணை:
எஸ். சுந்தரமூர்த்தி.

புளியங்கூடல்:
வி. போசராசா.

முரசொலி

எமது சிந்தனை

1990 — 11 — 06 செவ்வாய்

''அறிவுரை வரவேற்கப்படுவது அரிது, அது யாருக்கு அதிகம் தேவைப்படுகிறதோ, அவர் அதை விரும்புவதில்லை''

- ஜோன்ஸன்

# செவிடன் காதில் சங்கு

ஒரு மாதத்துக்கு முன் அவுஸ்திரேலியப் பிரதமர் பொப்ஹோப் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். கடிதத்தின் சாரம்: ''பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்!''

இரு வாரங்களுக்கு முன் பாரிஸில் கூடிய இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் பற்றிக் கவலை தெரிவித்ததோடு, அழிவுப்பணிக்குப் பயன்படும் நிதி உதவியையும் கணிசமாகக் குறைத்தன.

''போரை நிறுத்துங்கள்; பேச்சுவார்த்தையைத் தொடங்குங்கள்'' — இது, கடந்தவாரம் கனேடிய உயர் ஸ்தானிகர் அரசாங்கத்துக்கு வழங்கிய புத்திமதி.

அமெரிக்கக் கொங்கிரஸின் தென் ஆசிய விவகாரக் குழுவின் பிரதிநிதி, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து, அண்மையில் கவலை தெரிவித்திருக்கிறார்.

உலக நாடுகள் எல்லாம் இவ்வாறு இலங்கையின் காதில் சங்கூதவும், இங்கு ஒரு போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

தன்மீது ஆதிக்கம் செலுத்த முனையும் ஓர் அயல் நாடொன்றோடு மூண்டபோர் அல்ல இது. ஓர் அரசு தன் குடிமக்கள் மீது — ஒரு சிறுபான்மை மீது — தொடுத்துள்ள போர்!

நாடுகளுக் கிடையிலான போர் போலவே, இதிலும் உயிரிழப்பும் பொருட்சேதமும் மிக அதிகமாகவே இருக்கின்றன. இந்தியாவிலும் இலங்கையிலுமாக, பல லட்சம் மக்கள் அகதிகளாகியிருக்கின்றனர். போரின் பாதிப்பிலிருந்து நாடு மீள, பல தசாப்தங்கள் ஆகலாம்.

போரை நிறுத்த நூறுகாரணங்கள்; போரைத் தொடர வலுவான எந்தக் காரணமும் இல்லை. அப்படியிருந்தும், வீம்புக்காக, இந்தப்போர் நடக்கிறது!

எதிர்க்கட்சிகள் சில வழங்கும் புத்திமதி நாட்டு நன்மையைக் கருத்தில் கொண்டதா அல்லது அரசுக்குக் குழிபறிக்கும் உள்நோக்கம் உடையதா என்று சொல்வது கடினம். இல்லாவிட்டால், தமிழ்க்குழுக்களோடு பேச்சு நடத்தும் அதேமூச்சில், ஸ்ரீமாவோ அம்மையார் போர் முரசு கொட்டுவது எப்படி? இந்தியத் தேர்தல் வருமுன் ராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விடும்படி ஸ்ரான்லி திலகரத்ன புத்தி சொல்வது எப்படி?

தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்ற கருத்து—உணர்வு—மெய்யாகவே சிங்களத் தலைவர்களுக்கு இருக்குமானால், இந்தப் பிரச்சினைக்கு எப்பொழுதோ தீர்வு காணப்பட்டிருக்கும்.

நாட்டு நலன்பற்றித் தொலை நோக்கோடு சிந்திக்கக்கூடிய தலைவர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டமையே இன்றைய அவல நிலைக்குக் காரணம்.

எட்டாவது ஹென்றிக்கு மந்திரியாய் இருந்து அவனால் கொலைத்தண்டனை விதிக்கப்பட்ட கர்தினால் வூல்ஸி, சாகும்போது சொன்னானாம்:


''அரசனுக்குக் காட்டிய விசுவாசத்தின் அரைப் பங்கை, நான் ஆண்டவருக்குக் காட்டியிருந்தால் அவர் இந்த முதுமையில் என்னைக் கைவிட்டிருக்க மாட்டார்''

இக்கூற்றைச் சிறிது மாற்றிப் பின்வருமாறு சொல்லலாம்:

''தலைவர்கள், தம் குறுகிய அரசியல் லாபத்தில் காட்டிய அக்கறையில் அரைவாசியை நாட்டு நன்மையில் காட்டியிருந்தால், இந்த நாடு எப்பொழுதோ உருப்பட்டிருக்கும்!''

தொடர் — 06

# 'முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்'




கோட்டையை மீட்பதற்காக ஸ்ரீ லங்கா ராணுவம் நடாத்திய படையெடுப்பின் பாதைகள்

யாழ் கோட்டைக்கு நேரெதிரே மண்டைதீவு இருக்கின்றது கோட்டைக்கும் மண்டைதீவுக்கும் இடையில் சிறுதீவு எனப்படும் நிலப்பகுதியுள்ளது. யாழ்ப்பாணக்கடனீரேரி மண்டைதீவுக்கும் கோட்டைக்கும் இடையில் ஆழங்குறைந்த கடலாகவுள்ளது. கோட்டையின் கிழக்கு, மேற்கு, வடக்குப்பகுதிகளில் எதுவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத ஸ்ரீ லங்கா இராணுவம், கோட்டைக்குத் தென்புறமாகப்பரந்திருந்த மண்டைதீவு, வேலணைத்தீவு ஆகிய இரு நிலப்பரப்புக்களின் சமதரையையும், நன்கு அரண்செய்யப்படாத நிலைமையையும் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள முயன்றது. அதனால் தனது இராணுவ நடவடிக்கையை காரைநகரிலிருந்து (காரைதீவு) ஆரம்பித்தது.

## காரைநகர்க் கடற்படை

22, ஒகஸ்ட், 1990.

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து கடற்படையினர் வெளியேறத்தயாரானார்கள். அன்று அதிகாலையே ஹெலிக்கொப்டர்களும் 'சீ' பிளேயின்களும் காரைதீவை வட்டமிடத்தொடங்கின. தாழப்பறந்து நோட்டமிட்டன சிறிது வேளையில் ஹெலிக்கொப்டர்கள் நிலத்தை நோக்கிச் சுடத் தொடங்கின காரைநகர் கடற்படை முகாமிற்கு அருகில் வாழ்ந்த மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அதேவேளை ஊர்காவற்றுறைக்கடலில் கடற்படைக்கப்பல் ஒன்று விசைப்படகுகளில் இராணுவத்தினரை ஏற்றி ஊர்காவற்றுறையிலும், உருண்டிமுனையிலும் இராணுவத்தினரைக் குவிக்கத்தொடங்கியது. ஹெலிமூலம் ஊர்காவற்றுறையில் இராணுவம் இறக்கப்பட்டது. கண்மூடித்தனமாகச் சுட்டபடி இராணுவம் முன்னேறி நிலை கொண்டது. பொன்னாலை ஊடாக புலிகளுக்கு காரைநகரிற்கு உதவிகள் வராது தடுப்பதற்கான ஸ்ரீலங்கா இராணுவத்தினர் காரைநகரில் சிலவிடங்களில் முன்னேறிக் காவலரண்களை அமைத்துக்கொண்டனர். கடற்படை முகாமிலிருந்து வரும் வழியில் மக்கள் பலரை அவர்கள் கைதுசெய்து தம்முடன் அழைத்து வந்தனர். கைதுசெய்த மக்களை தம்முன் மனிதக்கேடயமாகச் செல்லவிட்டு அவர்கள் முன்னேறி வந்தனர். அவர்களால் கைதுசெய்யப்பட்டு அழைத்து வரப்பட்டவர்களில் ஒருவரான திரு. எஸ். தயாபரன் கூறுகிறார்:

## ஒரு கைதியின் கதை

''...கடற்படை முகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினர் காரைநகர் பஸ் டிப்போவிற்குள் புகுந்தனர். பின்னர் அங்கிருந்து விளானை வீதி வழியாக முன்னேறினர். நான் அவர்களிடம் அவ்விடத்தில் பிடிபட்டேன். என்னுடன் எனது மைத்துனனையும் பிடித்துக்கொண்டனர் எனது குடும்பத்தினரைப் போகவிட்டனர். 'எல் ரி. ரி. ஈ'' காம்ப்களைக்காட்டுமாறு என்னிடம் கேட்டனர். அப்படி இங்கில்லை என்றதும் சாந்திபுரத்திற்கு வழிகாட்டுமாறு கேட்டனர். சாந்திபுரம் ஒரு கடற்கரைத்துறையாகும். இராணுவத்தினர் காரைநகரின் படம் ஒன்றும் திசையறிகருவியும் வைத்திருந்தனர். பின்னர் இரு பகுதிகளாகப்பிரிந்து ஒரு பகுதியினர் சுமார் 50 பேர் வரையில் இருக்கும் புல்வெளிகளூடாக பாலாவோடைக்குச் சென்றனர். அங்கிருந்து சாந்திபுரத்திற்கு புல்வெளிகளூடாக வந்தனர். அங்கு சகல பாகங்களிலிருந்தும் வந்துசேர்ந்த இராணுவத்தினர் 1500 பேர் வரையில் இருந்தனர். பாலாவோடை வீதியிலுள்ள பழைய வீடு ஒன்றில் நான் படுக்கவிடப்பட்டேன் பின்னர் அவ்வீட்டினைப் பார்க்க வந்த நடராசா என்பவரும் என்னுடன் விடப்பட்டார். இருவரும் பின்புறமாகக் கைகள் கட்டப்பட்ட நிலையில் இரவு முழுவதும் தவித்தோம். அடுத்த நாள் காலை 10 மணியளவில் நாங்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டோம். மறுநாள் என் மைத்துனனை சடலமாகக் கண்டுபிடித்தேன். சண்முகம் கோபாலபிள்ளை என்பவரும் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.''

## ஊர்காவற்றுறையில் முகாம்

ஊர்காவற்றுறையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டனர் முப்பது வரையிலான கனரக வாகனங்கள் அவ்விடத்தில் குவிக்கப்பட்டன. ஊர்காவற்றுறையைவிட்டு மக்கள் வெளியேறி அயற்கிராமங்களுக்கு இடம்பெயரத்தொடங்கினர் விமானத்தாக்குதல்களும் ஹெலிச் சூடுகளும் ஷெல் தாக்குதல்களும் ஊர்காவற்றுறையிலிருந்து மேற்கொளளப்பட்டன 24 ஆந் திகதி ஸ்ரீலங்கா இராணுவம் மண்டைதீவை இலக்காக வைத்து முன்னேறத்தொடங்கினர்.

'அரவிந்தன்'

## மண்டைதீவு நோக்கி ...

ஊர்காவற்றுறையிலிருந்து இருபிரிவுகளாகப் பிரிந்து வடக்கு வீதிவழியாகவும், தெற்கு வீதிவழியாகவும், விமானங்கள் குண்டுவீசி பாதுகாப்பளிக்க இராணுவம் முன்னேறியது வழிகளில் அழிவுகளைச் செய்தபடி அராலிச்சந்தி, மண்கும்பான்சந்தி, அல்லைப்பிட்டிச்சந்தி என்பனவூடாக அல்லைப்பிட்டி அலுமினியத் தொழிற்சாலையை வந்தடைந்தது மற்றப் பிரிவினர் வேலணை, சாட்டி ஊடாக மண்கும்பானை வந்தடைந்தது மண்கும்பானிலிருந்து இரண்டாகப்பிரிந்து கடற்கரையோரமாக ஒரு பிரிவினர் கீரிமுனைப்பகுதியூடாக பரவைக் கடலைக் கடந்து மண்டைதீவை அடைந்தனர். மறுபகுதியினர் வீதியூடாக மண்டைதீவை அடைந்தனர். இராணுவம் சென்ற பகுதிகளில் உயிர்சேதங்களும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன. நாரந்தனை, சரவணை, ஊர்காவற்றுறை மக்கள் சுருவில் சென். மேரிஸ் தேவாலயத்திற்கு அகதிகளாகச் சென்று தங்குமாறு இராணுவத்தினர் ஹெலி மூலம் துண்டுப்பிரசுரங்கள் போட்டனர்.

(வளரும்)

வவுனியா நகரத்தில்

# இராணுவம் குவிக்கப்பட்டும் சிவில் நிர்வாகம் சீராகவில்லை

வவுனியாவில் இராணுவம் குவிக்கப்பட்டபோதிலும் இராணுவத்தினரால் அப்பகுதியில் சிவில் நிர்வாகத்தைப் பூரணமாக ஏற்படுத்த முடியவில்லை.

இப்பகுதியில்தபாற் சேவை, பாடசாலைகள், அலுவலகங்கள் இன்னமும் முழுமையாகச் செயற்படவில்லை. வங்கிகள் மட்டுப்படுத்தப்பட்ட நேரம் பணிபுரிகின்றன. இரண்டு மணிக்குப் பின்பு எந்த அலுவலகமும் இயங்குவதில்லை.

அப்பகுதியில் மாலையில் மயான அமைதி ஏற்படுகிறது பஸ் சேவைகளும் ஆரம்பிக்கவில்லை. அனுராதபுரத்திலிருந்து ஒரு சில மினி பஸ்கள் மட்டும் வவுனியாவுக்கு வந்து செல்கின்றன. ஒருசில வர்த்தக நிலையங்களே திறக்கப்பட்டுள்ளன. சிற்றுண்டிச்சாலைகளும் ஒரு சிலவே காணப்படுகின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வகை இனம் புரியாத பீதிநிலை காணப்படுகிறது, (38)

# நகரில் சேதமடைந்த வீடுகளில் தினமும் பகலில் கொள்ளை

யாழ் நகரில் கடந்த நான்கு மாதங்களாக இடம்பெற்ற விமானத்தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் காரணமாக 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் குறுக்குத்தெருக்களில் உள்ள பல வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இதனால் இவற்றின் உரிமையாளர்கள் இங்கு வந்து குடியமரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பலர் பகல் நேரங்களில் இந்த வீடுகளுக்கு வந்து தாம் வீட்டு உரிமையாளர்கள் என்று கூறி ஓடுகள், கதவுகள், உடைந்த கற்கள் போன்றவற்றை எடுத்துச் செல்கின்றதைத் தினமும் காணமுடிகிறது.

சிலர் இந்த ஓடுகளை நகரின் சில பகுதிகளில் மலிவாக விற்பனை செய்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ப17)

# நான்காம் கட்ட நிவாரணம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைப்பு

இடம் பெயர்ந்தவர்களுக்கும், தொழில் இழந்தவர்களுக்குமான 4-ம் கட்ட நிவாரணம் வழங்குதல் மறு அறிவித்தல் வரும்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு நேற்றுக் கச்சேரியில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதன் தலைமையில் கூட்டுறவுச்சங்கத்தலைவர்கள் உணவுத்திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இதே வேளை அரசாங்க அதிபரினால் கிராம சேவையாளர் ஊடாக வழங்கப்படும் புதிய நிவாரணப் பங்கீட்டு அட்டைகளைத் துரிதமாக வழங்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. (ப-10)

# மன்னார்ப் பகுதியில் 'நாங்களும் புலிகளே'

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் ''நாங்களும் புலிகளே'' என்ற தெருக்கூத்து மேடையேற்றப்பட்டுவருகிறது.

மடு, பண்டிவிரிச்சான், உயிலங்குளம், சூரியகட்டைக்காடு, நானாட்டான், முருங்கள் ஆகிய பகுதிகளில் மேடையேறும் இத் தெருக்கூத்துக்கு காலநிலை சீரற்றிருந்தபோதிலும் ஏராளமான மக்கள் கூடி ரசிக்கின்றனர்.

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு யாழ்ரன் கல்லூரியில் இடம்

இடம்பெயர்ந்து வந்துள்ள வெளிமாவட்டப் பாடசாலை மாணவர்களை காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் தற்காலிகமாக கல்வி கற்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்பு. கலை வர்த்தகப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களை இங்கு கல்வி பயிலுமாறு இக்கல்லூரி அதிபர் எஸ். சேனாதிராசா அழைப்புவிடுத்துள்ளார் ப31


## இடமாற்றம்

சாவகச்சேரி சந்தையினுள் 12-ம் இலக்க கட்டிடத்தில் இருந்த

**சிவா ஸ்ரோர்ஸ்**

கடந்த 24—10—90ல் இடம் பெற்ற பொம்மர்த் தாக்குதலால்அதன் மேற்குப் பக்கமாக உள்ள கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

வை. பாலன்
உரிமையாளர்
11039


யே. ம. சு. துணை

## 31-ம் நாள் நினைவஞ்சலி

சாரையடி புலோலி தெற்கு

**அமரர் ம. ஞானமுத்து அவர்கள்**

தோற்றம் 01-07-1929



மறைவு 07-10-1990

அன்பின் உறைவிடமாய் எமக்கு நல்வழி காட்டிய தெய்வமே! உன் ஆத்மா சாந்தியடைவதாக.

இன்று 06-11-1990ல் எமது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் நினைவு தினத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
உமது பிரிவால் வாடும்
அன்பு மனைவி, சகலன், சகோதரிகள்
மைத்துனர்மார், மைத்துனிமார்,
பேரப்பிள்ளைகள்.

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி. 06-11-1990
11038

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷமிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 06-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது'

### ஆசிரிய கலாசாலை செய்முறைப் பரீட்சை

இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களுக்கான செய்முறைப்பரீட்சை நவம்பர் 8-ம் திகதி தொடக்கம் 22-ம் திகதி வரை, சனிக்கிழமைகள் உட்பட நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைவர் வரவும் முக்கியம் என அதிபர் வை. கா. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

**நேற்றுப்...**

மகளிர்-250 க்கு மேல், என்ற விதத்தில் மாணவர்களின் வரவு அமைந்திருந்தது.

சில பாடசாலைகளில் அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளதால் வகுப்புக்களை நடாத்தமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

**யாழ்ப்பாணப்...**

அமுலில் இருக்கும். விடுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கு ஜெனறேற்றர் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது. விடுதி மாணவர்களுக்கு விளக்குகளுக்கு மண்ணெண்ணையும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகிறது.

பல்கலைக்கழக விரிவுரை மண்டபங்களுக்கு நீர், மின்சாரம் பெறக்கூடிய சாத்தியக்கூறு தற்சமயம் இல்லாமையால் இங்குள்ள மூன்று ஜெனறேற்றர்கள் மூலம் மின்சரம் பெற நடவடிக்கைகள் ஏற்பாடாகியுள்ளதாகவும் உபவேந்தர் தெரிவித்தார்.

இதேசமயம் நேற்று வழமைக்கு மாறாக புதிய மாணவர்கள் 'ராக்கிங்' இன்றி வரவேற்கப்பட்டனர்.

# ஒரே குடும்பத்தில் மூன்றாவது நபரையும் பாம்பு தீண்டியது

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்றாவது நபர் பாம்புக்கடிக்கு இலக்காகிய பரிதாப சம்பவம் சாவகச்சேரிப் பெரிய மாவடியில் நிகழ்ந்துள்ளது.

ச. மகேஸ்வரன் என்பவரே இரவு சைக்கிளில் செல்லும்போது இவ்வாறு பாம்புக்கடிக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வருபவராவர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இவரது அண்ணனும், மனைவியும் பாம்புக்கடிக்கு இலக்காகி நிறைமாதக் கற்பவதியான மனைவி நகுலா (23) மரணமானது முரசொலி வாசகர்கள் அறிந்ததே.

தொடரும் இப்பாம்புக் கடியைத் தொடர்ந்து பெரிய மாவடியைச் சேர்ந்த மக்கள் இரவு நேரத்தில் வெளியே வரத்தயக்கமடைந்துள்ளனர். (ப-5)

## முகாம் தாக்குதலில் களப்பலியான

# போராளிகளுக்கு மணலாறில் மக்கள் இறுதி அஞ்சலி

மணலாறு மினிமுகாம் அழிப்பில் வீரமரணமடைந்த மேஜர் சங்கர், 2-ம் லெப். மதுவன், முசோலினி ஆகியோரின் பூதவுடல்களுக்கு ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

கொக்குத்தொடுவாய், 15-ம் கட்டை, செம்மலை, அலம்பில், குமுழமுனை போன்ற இடங்களுக்கு இவர்களது பூதவுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது ஏராளமான மக்களும், புலிகளின் மணலாறு மாவட்ட அரசியல், ராணுவப் பொறுப்பாளர்களும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

ராணுவ மரியாதையுடன் பூதவுடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. மினி முகாமில் கைப்பற்றிய ஆயுதங்களும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

**பலாலியிலிருந்து...**

வெளிச்சத்தினால் மக்கள் அச்சத்தோடு காணப்பட்டார்கள்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகலளவில் அம்பனை, தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி பகுதிகள் நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. (ப10)

**வி, பி. சிங்கின்...**

சென்று சந்திக்கப் போவதில்லை என்றும் ஏனைய கட்சித் தலைவர்களை சந்திரசேகர் சந்திக்கவுள்ளார்.

ஏனைய கட்சிகளின் ஆதரவு கிடைத்தால்தான் தாம் பிரதமராக முடியும் என சந்திரசேகர் குறிப்பிட்டார். இது தொடர்பாக இன்று அவர் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியைச் சந்திக்கவுள்ளார்.

இந்தத் திருப்பங்களின் பின்னணியில் அடுத்த 24 மணிநேரத்தில் புதுடில்லியில் மிக முக்கியமான அரசியல் மாற்றங்கள் இடம்பெறலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

### கூட்டுறவுப் பரிசோதகர் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் சகல கூட்டுறவுப் பரிசோதகர்களையும், கூட்டுறவுத் திணைக்கள ஊழியர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி விவசாய போதனாசிரியர் பாடசாலை மண்டபத்திற்குத் தவறாது சமுகம் தருமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலக கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

**பாதுகாப்பு...**

லுக்கு உள்ளானவர்கள்ராணுவத்தின் சிங்க றெஜிமென்ட்டின்மூன்றாம்படைபிரிவாவர்.

**திருமலை...**

வெடிகளில் சிக்கியதால் பல சிப்பாய்கள் கால்களை இழந்தனர்.

இம் மோதல்களில் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் கனகு. இலக்குமன், கணேஷ் ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

**களுவாஞ்சிக்குடி...**

தூரத்தில் வைத்து மரண தண்டனை வழங்கினர்.

கொல்லப்பட்டவர் கமலநாதன் (30) குருமண்வெளி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## காலமானார்

**திரு. ஐயம்பிள்ளை பெரியதம்பி**

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திரு, ஐயம்பிள்ளை பெரியதம்பி 04—11—1990 அன்று காலமானார். இவர் அழகம்மாவின் அன்புக் கணவரும், பாலசுந்தரம் (சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), வசந்திமாலா, சறோஜினி, சசிலேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமியின் தமையனும், மகாலட்சுமியின் மச்சானும், இரத்தினசிங்கம், காந்தி(லிபியா). நீலாவதி ஆகியோரின் மாமனாரும், பிரதீபன், பிரமிளா, பிரதாப், மீரா, மதுரா, மயூரா ஆகியோரின் பேரனும், குலசிங்கம், சோதிலிங்கம் (சவுதி), புஸ்பலதா, வசந்தா, வசந்தலிங்கம், சிவலிங்கம், லலிதா. சகிலா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 05—11—1990 அன்று நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பெ. பாலசுந்தரம்.
(மகன்)

11040